ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்.

# அங்காரகன்பதிகம்.

திருப்போரூர்

டி. கோபால் நாயகர்

அவர்களாற்றமது

மதராஸ், என். சி.

கோள்டன் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது

1914.

17-18 காளத்தியப்ப முதலிவீதி மதராஸ் என். சி.

ஸ்ரீ

ஸ்ரீ ராமஜெயம்.

# அங்காரகன் பதிகம்.

## காப்பு.

### இன்னிசை-வெண்பா.

திருவாழ்பிரமபுரிச் செந்தாமரைக்கண்
பெருமான் வரதனருள் பெற்றுத்—தமியேனிச்
சங்காழிசூழ்புவியிற் சாற்றுவன்சீரோங்க
அங்காரகன்பதிக மார்த்து.

## நூல்.

### பதினான்குசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

சீர்தங்குந்திருமாலரனயனுச்
செகமுழுதுந்தருதொல்
செப்பியமூவர்களிவருடனின்னுந்
தேவருமாதவரும்
ஏர்மலிநான்மறைவேதியரும்புக
ழெவ்வரசாள்தனையும்
எங்கணுமிசையுறப்பொங்கித்தொழுவதை
யேதென்றறியுங்கால்

நீர்வந்தவர்களுதித்தெழுபோதருள்
நேர்கொண்டுண்மையதாய்
நின்றாய்நீயுமொர்நன்றாமிடமதில்
நிலையுற்றருளியதால்
ஆர்தானாகிலுந்தேடிநீசெல்வதி
னடியேனுனைத்தொழுவேன்
அதிக்ரூரந்தனைவிடவேணுஞ்சுக
மருளங்காரகனே. (௧)

ஜெகமதில்நவகோள்தனில்பிரிவாகிய
தினகரன்மதிகுருதி
திங்கள்சுதன்குருசுங்கனுடன்சனி
செயபணிராகுவுமே
சகலசீவனுமுதித்தருளுமங்கொடிதனில்
தகைமையாயுறபாலனே
தருதலினாலெனக்கதிகசினந்தனைத்
தந்துநெருங்குவதால்
நிகருமக்கொருபொருளுளதோபுவிதனில்
நேயமதாயுமது
நியமமதாகத்தயைபாலித்து
நிலைசெய்திடர்நீக்காய்
அகமதுமகிழ்வாய்மிகவுளமுருகி
யடியேனுனைத்தொழுவேன்
அதிக்ரூரந்தனைவிடவேணுஞ்சுக
மருளங்காரகனே. (௨)

மதியணிசிவனள னதிதிசுதன்விதி
மாவரிச்சந்திரனும்
மாதவனாகியராமனுயர்ந்திடு
மற்றுளவரசர்களும்
பதிதனைநீக்கிப்பெருவனமேகிப்
பாசறையுற்றதெலாம்
பார்மிசைகாரிக்கோபமதென்று
பகர்வருன்சினமறியார்
நிதிபகைதுயரெனுங்கொடுமைகளுனதால்
நேர்ந்தனையுறுவதெலாம்
நின்னதுசெயலென்றெண்ணித்துணிவொடு
நித்தியமாஞ்செல்வம்
அதிகமதாய்நீரிதவொடுதயைசெய
வடியேனுனைத்தொழுவேன்
அதிக்ரூரந்தனைவிடவேணுஞ்சுக
மருளங்காரகனே. (௩)
இசைபெறுபுவிதனிலிருவரெனுந்திரு
மாலையுமீசனையும்
எண்டிசையும்பாரண்டமும்வைதனக
கேற்குநாயகமெனநீர்
வசமுடனுற்றேயவர்களைச்சித்தாய்
வந்துறவவர்நுமது
வல்லமையெள்ளளவேனும்வெல்ல
மாட்டாராகையினல்

தசரதன்மைந்தனும்வனமதிலேகச்
சனகியைப்பிரிவித்தீர்
சம்புசயம்புதனோட்டிலீரக்கத்
தானுஞ்செய்வித்தீர்
அசைவறும்புவிதனிலிடர்தனின்மூழ்கி
யடியேனுமைத்தொழுவேன்
அதிக்ரூரந்தனை விடவேணுஞ்சுக
மருளங்காரகனே. (௪)

சத்தியமென்பதில்சுற்றியதாரரிச்
சந்த்ரனைநகர்நீக்கிச்
சந்திரமதிதனையனைமறையோர்க்குத்
தானடிமையதாக்கிக்
கீர்த்தியமாகப்புலையற்கவனைக்
கிணைதனென்றாக்கியபின்
கிளர்முடிசூட்டச்சித்தமிரங்கிக்
கிருபையுடன்மேவிக்
கத்தியினாலவன்மனைவியைவெட்டுங்
காக்ஷியினனைவருடன்
காசினிதருகவவ்வேளையிலுதவிய
கருணைகொடன்புடனே
அத்திப்புவிச்சம்பத்துகள்தருவா
யடியேனுனைத்தொழுவேன்
அதிக்ரூரந்தனைவிடவேணுஞ்சுக
மருளங்காரகனே. (௫)

மனதினிலுறு துயரதனுடனிடர்பிணி வல்வினை சூனியமும், வந்திடினிவைமுதலாகியதுன்ப மறைந்தரை நொடியளவில், தினகரன்முன்பனி யிலகிய படியிடர்தீர்ந்திடச்செய்வதால், ஜெயகோள்நின்புகழ் சொலுமிப்பதிகந் தினமெவர் துதிசெயினும், கனமுளதிருவவர்மனைதனில்மேவி கடாக்ஷமுமுற்றதனால், காவலனுயதிபோகதனங்கள் கலங்கெனும் வாழ்ந்திடுவார், அனுதினமுன்புகழ்தனையே துதிசெய் தடியேனுனைத்தொழுவேன், அதிக்ரூரந்தனைவிட வேணுஞ்சுக மருளங்காரகனே. (கய)

அங்காரகன்பதிகம் முற்றிற்று.